RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 340 | டிசம்பர்.10 2025 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## திமுகவுக்கு இந்துக்கள் தேர்தலில் பாடம் புகட்டுவர்: விஷ்வ ஹிந்து பரிஷத் காட்டம்



மதுரை. டிச.10-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீப தூணில் உயர்நீதிமன்றம் உத்தரவிட்டும் தீபம் ஏற்ற அனுமதி கொடுக்க மறுத்த திமுக அரசுக்கு வரும் தேர்தலில் இந்துக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என விஷ்வ ஹிந்து பரிஷத் தெரிவித்துள்ளது.

மதுரையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய விஷ்வ ஹிந்து பரிஷத்தின் மாநில இணை பொதுச் செயலாளர் வழக்கறிஞர் சந்திரசேகரன், "தமிழக அரசு தொல்லியல் துறை ஆவணங்களில் திருப்பரங்குன்றம் மலை உச்சியுள்ள தீபத் தூணில் தீபம் ஏற்றியதற்கான ஆதாரங்கள் இருப்பது தற்போது வெளியாகி உள்ளது. திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூண் நில அளவை கல் என திமுக எம்பி கனிமொழி கூறியது பொய் எனத் தெரியவந்துள்ளது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபர் உண்மை என்னவென்று தெரியாமல் வாய்க்கு வந்தபடி பேசுவது வேதனையானது.

உயர்நீதிமன்றம் மதுரை அமர்வு உத்தரவிட்ட பிறகும் கூட திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீப தூணில் தீபம் ஏற்ற அனுமதி மறுத்த திமுக அரசுக்கு இந்துக்கள் வரும் சட்டப்பேரவை தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள். சிறுபான்மையினர் ஓட்டுக்களை மனதில் வைத்து திமுக அரசு தொடர்ந்து இந்து விரோத போக்கில் ஈடுபட்டு வருகிறது. இந்துக்களை அவமதித்து சிறுபான்மையினர் ஓட்டுக்களை அள்ளலாம் என்ற நினைப்பில் திமுக அரசு இவ்வாறு செயல்பட்டு வருகிறது.

திமுகவின் இந்த போலி மதச்சார்பின்மையை இந்துக்கள் மட்டுமின்றி நடுநிலையாளர்கள் கூட அறிந்து கொண்டுள்ளனர். திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற வேண்டும் என அந்த கிராமத்தைச் சேர்ந்த எல்லா மதத்தினரும் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்து வருவதில் இருந்தே தீப தூணில் தீபம் ஏற்ற யாருக்கும் ஆட்சேபனை இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது.

எனவே திமுக அரசு தனது ஈகோவை விட்டுவிட்டு மேல் மேல்முறையீடு மனுவை திரும்ப பெற்று உயர் நீதிமன்ற மதுரை அமர்வின் உத்தரவின்படி திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத் தூணில் தீபம் ஏற்ற முன்வர வேண்டும். தவறினால் அடுத்தாண்டு சட்டப்பேரவை தேர்தலுக்குப் பிறகு திமுக அரசு வருத்தப்பட நேரிடும்"என்று சந்திரசேகரன் கூறினார்.



■ மதுரை மன்னர் திருமலைநாயக்கர் மகாலில் நடைபெற்று வரும் புனரமைப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு கே ஜே பிரவீன்குமார் இஆப அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



■ மதுரை மாவட்டம், டாக்டர்.தங்கராஜ் சாலை பகுதியில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திர கிட்டங்கியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே. பிரவீன்குமார் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிகள் முன்னிலையில் வாக்கு பதிவு இயந்திரங்களில் முதல் நிலை சரிபார்ப்பு பணிகள் துவக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## திருப்பரங்குன்றம் மலையில் கல்லத்தி மரத்தில் பிறை கொடி: அகற்ற இந்து மக்கள் கட்சி வலியுறுத்தல்

மதுரை, டிச.10-

திருப்பரங்குன்றம் மலையில் கல்லத்தி மரத்தில் கட்டப்பட்டுள்ள பிறை கொடியை அகற்ற இந்து மக்கள் கட்சி மனு அளித்துள்ளது.

இது தொடர்பாக மதுரை மாவட்ட இந்து மக்கள் கட்சி தலைவர் சோலை கண்ணன், திருப்பரங்குன்றம் கோயில் அதிகாரியிடம் அளித்த மனுவில், "திருப்பரங்குன்றம் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு சொந்தமான மலை மீதுள்ள தலைவிரிச்சான் கல்லத்தி மரத்தில் நிலா பிறை போட்ட கொடி ஏற்றப்பட்டுள்ளது.

இக்கொடியை அகற்றவும், திருக்கோயில் இடத்தையும், கல்லத்தி மரத்தையும் ஆக்கிரமிக்க திட்டமிடும் தர்ஹா நிர்வாகம் மீது நடவடிக்கை எடுக்கவும், கல்லத்தி மரத்தை பாதுகாக்கும் விதமாக மரத்தின் மீது முருகனின் சேவல் கொடியை ஏற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திமுகவை நம்பாதீங்க; நம்ப வைத்து ஏமாற்றுவது தான் அவர்கள் வேலை: நடிகர் விஜய்

புதுச்சேரி: டிச.10-

திமுகவை நம்பாதீங்க, உங்களை நம்ப வைத்து ஏமாத்துவது தான் வேலையே என்று தவெக தலைவர் நடிகர் விஜய் பேசினார்.

புதுச்சேரியில் உப்பளம் துறைமுக திடலில் தவெக பொதுக்கூட்டத்தில் அக்கட்சியின் தலைவர் நடிகர் விஜய் கலந்து கொண்டார். கரூர் துயரத்திற்கு பின்னர் திறந்த வெளி அரங்கில் முதல் முறையாக இன்று தான் அவர் பங்கேற்றார்.



பொதுக் கூட்டத்தில் அவர் பேசியதாவது;

இந்த மத்திய அரசுக்கு தான் தமிழகம் ஒரு தனி மாநிலம். புதுச்சேரி ஒரு தனி யூனியன் பிரதேசம். அவர்களுக்கு தமிழகம் தனி, புதுச்சேரி தனி அப்படி என்று இருப்பார்கள். நமக்கு எல்லாம் அப்படி கிடையாது.

நாம் எல்லாரும் வேறு வேறு கிடையாது. நாம் எல்லோரும் ஒன்று தான். தமிழகமும், புதுச்சேரியும் தனித்தனியாக இருந்தாலும் நாம் எல்லோரும் ஒன்றுதான், சொந்தம்தான்.

வேற, வேற வீட்டில், வேற வேற மாநிலத்தில், வேற வேற நாட்டில் இருக்கிறோம் என்பதால் நாம் எல்லோரும் சொந்தங்கள் இல்லை என்று ஆகிவிட முடியுமா? அது எப்படி முடியும்? ஒருத்தரை ஒருத்தர் பார்க்கும் போது பாச உணர்வு, அது இருந்தால் போதும், வேறு எதுவும் தேவையில்லை.

உலகத்தில் எந்த இடத்தில் நம்ம வகையறா இருந்தாலும் அவர்கள் எல்லாரும் ஒன்றுதான். நமது உயிர்தான். புதுச்சேரி என்றால் உடனே ஞாபகம் வருவது மணக்குள விநாயகர், அரவிந்தர் ஆசிரமம், வில்லியனூர் மாதா.

அதுமட்டுமல்ல, மகாகவி பாரதி இருந்த மண், பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த மண். ஆனால் அரசியல் என்று வந்துவிட்டால் ஒரு முக்கியமான விஷயத்தை பற்றி சொல்லியே ஆகவேண்டும்.

1977ல் எம்ஜிஆர் தமிழகத்தில் ஆட்சி அமைத்தார். ஆனால் அதற்கு முன்னரே 1974ல் புதுச்சேரியில், இங்கே அவர்கள்(அதிமுகவை குறிப்பிடுகிறார்) ஆட்சி இங்கே அமைந்தது. அதனால் தான் அப்பவே சொன்னார்கள் நமக்காக வந்தவர் எம்ஜிஆர். அவரை தமிழகத்தில் இருப்பவர்கள் மிஸ் பண்ணிவிட வேண்டாம் என்று நமக்கு அலர்ட் கொடுத்ததே புதுச்சேரி தான்.

அப்படிப்பட்ட புதுச்சேரியை மறக்கமுடியுமா? இங்கிருக்கும் மக்கள் தமிழகம் போலவே கிட்டத்தட்ட 30 வருஷம் என்னை தாங்கி பிடித்துக் கொண்டு இருக்கிறீர்கள். அதனால், இந்த விஜய் தமிழகத்திற்கு மட்டும் தான் குரல் கொடுப்பான் என்று நினைக்காதீர்கள்.

அப்படி பண்ணினால் அது தவறு. புதுச்சேரி மக்களுக்கும் சேர்த்து தான் குரல் கொடுப்பான், அது என் கடமையும் கூட. அதனால் தான் இங்கு நீங்க எதிர்கொண்டு வரும் பிரச்னைகள் பற்றி பேச இங்கு வந்திருக்கிறேன்.

இந்த புதுச்சேரி அரசாங்கம் பற்றி சொல்லியாக வேண்டும். இது கட்டாயம் தமிழகத்தில் உள்ள திமுக அரசு மாதிரி கிடையவே கிடையாது. ஏன் என்றால் வேற ஒரு அரசியல் கட்சி நடத்துகிற நிகழ்ச்சியாக இருந்தாலும் அந்த நிகழ்ச்சிக்கு தன்னெழுச்சியாக வரும் மக்களுக்கு பாதுகாப்பு கொடுத்து, பாரபட்சமே காட்டாமல் இந்த அரசாங்கம் நடந்து கொண்டு இருக்கிறார்கள்.

அப்படிப்பட்ட புதுச்சேரி அரசுக்கும், நம்ம சிஎம் சார் அவர்களுக்கும் இந்த நேரத்தில் என் மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். இதை பார்த்தாவது தமிழகத்தில் இருக்கும் திமுக அரசாங்கம் கற்றுக் கொண்டால் நன்றாக இருக்கும். ஆனால் அவர்கள் கற்றுக் கொள்ள மாட்டார்கள், பரவாயில்லை.

வரப்போகும் தேர்தலில் 100 சதவீதம் கற்றுக் கொள்வார்கள். அதை நம்ம மக்கள் பார்த்துக் கொள்வார்கள். (கைகளில் சில தாள்களை எடுத்து வைத்து, அதை வாசிக்க ஆரம்பிக்கிறார் விஜய்)

புதுச்சேரியில் அரசின் கூட்டணி ஆட்சியில் இருந்தாலும், புதுச்சேரியை மத்திய அரசு எதிலும் கண்டு கொள்ளவில்லை என்பது புதுச்சேரி மக்களான உங்களுக்கு நல்லாவே தெரியும். மாநில அந்தஸ்து கோரிக்கையை மட்டுமா கண்டுக்கவில்லை?

இங்கு வளர்ச்சி ஏற்பட துணை நிற்கவே இல்லை என்று கேள்விப்படுகிறோம். இந்த புதுச்சேரிக்கு இன்னமும் மாநில அந்தஸ்து கொடுக்கவில்லை. மாநில அந்தஸ்து வேண்டும் என்று கேட்டு, பல முறை சட்டசபையில் தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைத்துக் கொண்டே இருக்கின்றனர்.

இந்த வருஷம் கூட மார்ச் மாதம் 27ம் தேதி ஒரு தீர்மானம் போட்டார்கள். அது மாநில அரசு வேண்டும் என்று கேட்டு, மத்திய அரசுக்கு அனுப்பும் 16வது தீர்மானம். புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் மூடப்பட்ட 5 மில்கள், பல்வேறு தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு இதுவரைக்கும் ஒரு துரும்பை கூட கிள்ளி போடவில்லை.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புக்கு எதுவுமே செய்யவில்லை. இங்கு ஒரு ஐடி கம்பெனி உருவாக வேண்டும் என்ற எண்ணமே இல்லை. அதை பத்தி யார் பேசுனாலும் அது அவர்கள் காதில் விழவே இல்லை.

இங்கே ஒரு அமைச்சரை ஊழல் குற்றச்சாட்டில் பதவியை விட்டு நீக்கப்பட்டு அந்த இடத்துக்கு இன்னொருத்தரை நியமித்து 200 நாட்கள் ஆகவிட்டது. இன்னும் அவருக்கு ஒரு இலாகாவே தரலை. இந்த செயல், சிறுபான்மை மக்களை அவமானப்படுத்துவதாக உள்ளதாக அந்த மக்களே சொல்கின்றனர்.

புதுச்சேரியின் முக்கிய அங்கமாக இருக்கும் காரைக்கால், மாஹே, ஏனாம் பகுதிகளில் முன்னேற்றமே இல்லை என்று அந்த பகுதி மக்களே சொல்கின்றனர். குறிப்பாக காவிரியின் கடைமடை பகுதியான காரைக்காலை மொத்தமாக கைவிட்ட மாதிரி இருக்கிறது. எல்லாம் முன்னேற்றம் அடையணும்.

சுற்றுலாதலமான புதுச்சேரியில் போதுமான பார்க்கிங் வசதி இல்லை. போதுமான அளவு கழிப்பறை வசதி இல்லை. இதை எல்லாம் மேம்படுத்தணும்.

புதுச்சேரி, கடலூர் மார்க்கமாக ரயில் திட்டம் வேண்டும் என்பது நீண்ட கால கோரிக்கை. புதுச்சேரி மக்களுக்கு ஒண்ணே ஒண்ணு நான் சொல்ல வேண்டும். இந்த திமுகவை நம்பாதீங்க... அவர்களுக்கு உங்களை நம்ப வைத்து ஏமாத்துவது தான் வேலையே.

நான் சொன்ன பல கோரிக்கைகளை தீர்த்து வைப்பதற்கு நம்ம புதுச்சேரி அரசுக்கும், அதோட மக்கள் திட்டங்களுக்கும் உண்மையாக துணை நிற்க வேண்டும். தமிழகத்தை ஒதுக்குகிற மாதிரி, புதுச்சேரியையும் ஒதுக்கக்கூடாது என்று நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்.

கிட்டத்தட்ட 20 லட்சம் பேர் வாழும் யூனியன் பிரதேசமான புதுச்சேரி மத்திய நிதிக்குழுவில் இடம்பெறவில்லை. அதனால் மாநிலங்களுக்கான நிதி பகிர்வு அடிப்படையிலும். யூனியன் பிரதேசங்களுக்கான நிதி பகிர்தல் அடிப்படையிலும் புதுச்சேரிக்கு நிதி ஒதுக்கப்படுவது இல்லை.

அதனால் ஒவ்வொரு ஆண்டும் புதுச்சேரிக்கு தோராயமாகவே மத்திய அரசு நிதியை விடுவிக்கிறது. அந்த நிதியும் அரசு ஊழியர்கள் சம்பளம், ஓய்வூதிய திட்ட தொகை உள்ளிட்ட செலவுகளுக்கே சென்றுவிடுவதால் மீத தேவைக்கு வெளிச்சந்தையிலும், கடன் பத்திரங்களில் கடன் வாங்குகிறது புதுச்சேரி.

இந்த நிலை மாறவேண்டும் என்றால் ஒரே வழி... மாநில அந்தஸ்து. போதுமான நிதி வரத்து இல்லாததால் வெளியே கடன் வாங்க வேண்டி உள்ளது. புதுச்சேரி கடனை குறைத்து தற்சார்பு பொருளாதாரத்தை வளர்த்து எடுக்க திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும்.

மாநில அந்தஸ்து வாங்கினால் மட்டும் போதாது இல்லையா? தொழில் வளர்ச்சியும் தேவை. இந்திய அளவில் ரேஷன் கடைகளை இல்லாத மாநிலம் புதுச்சேரிதான். ஏழை எளிய மக்களுக்கு வாழ்வாதாரமே ரேஷன் கடைகள்தான்.

மற்ற மாநிலங்களில் இருப்பது போல இங்கேயும் அரிசி, சர்க்கரை, பருப்பு, கோதுமை, எண்ணெய் என அனைத்து பொருட்களும் வழங்கும் முறை சீராக்கப்பட வேண்டும். மீன்பிடிக்க செல்லும் காரைக்கால் மீனவர்களை அடிக்கடி கைது செய்யும் இலங்கை கடற்படை அவர்களின் படகுகளையும் பறிமுதல் செய்துவிடுகிறது.

நீண்ட போராட்டங்களுக்கு பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டாலும் படகுகள் கிடைக்காததால் படு மோசமான நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இந்த நிலை மாறவேண்டும். இந்த விஜய் புதுச்சேரி மக்களுக்கான எப்பவும் துணை நிற்பான்.

வரபோற புதுச்சேரி தேர்தல் களத்தில் நம்ம தவெக கொடி பட்டொளி வீசி பறக்கும். நம்பிக்கையாக இருங்கள், நல்லதே நடக்கும். வெற்றி நிச்சயம்.

இவ்வாறு தவெக தலைவர் நடிகர் விஜய் பேசினார்.

## தமிழகத்தில் திமுக துடைத்தெறியப்படும்: அமித் ஷா

ஆமதாபாத், டிச.10-

2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் தமிழகத்தில் திமுக துடைத்தெறியப்படும், இதனை ஸ்டாலினுக்கு தெரிவித்துக் கொள்கிறேன் என்று மத்திய அமைச்சர் அமித் ஷா ஆவேசமாக கூறினார்.

குஜராத்தில் பல்வேறு அரசு திட்டங்களை உள்துறை அமைச்சர் அமித் ஷா தொடங்கி வைத்தார். அப்போது நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்தவர்கள் மத்தியில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்த கூட்டத்தில் அவர் உரையாற்றினார்.

அமைச்சர் அமித் ஷா பேசியதாவது;

2014ம் ஆண்டு லோக்சபா தேர்தல் முதற்கொண்டு தற்போது வரை பாஜ தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறது. 2024 லோக்சபா தேர்தலில் 3வது முறையாக மோடி பிரதமர் ஆனார். பல ஆண்டுகளுக்கு பின் நிகழ்த்தப்பட்ட சாதனை இது.



அனைத்துத் துறைகளிலும் நம் நாடு வளர்ச்சி கண்டு, உலக நாடுகள் மத்தியில் சிறந்த நாடாக மாறும் என்று மக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். எதிர்க்கட்சிகளில் தலைவர்களோ, கொள்கைகளோ இல்லை. நாட்டில் எங்குமே அவர்களை மக்கள் ஏற்றுக் கொள்ளப் போவது இல்லை.

உங்கள் முன்னால், இந்த மேடையில் இருந்து கொண்டே மம்தா பானர்ஜி, ஸ்டாலின் ஆகியோருக்கு நான் ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். பீஹாரையடுத்து, மேற்கு வங்கம், தமிழகம் ஆகிய மாநிலங்களில் தேசிய ஜனநாயக கூட்டணியானது, தேர்தலில் அமோகமாக வென்று பெரும் திருப்புமுனையை ஏற்படுத்தும். நீங்கள் அதற்கு தயாராக இருங்கள்.

2026ம் ஆண்டு தேர்தல் முடிவுகள் வெளியாகட்டும். மேற்கு வங்கத்தில் திரிணமுல் காங்கிரசும், தமிழகத்தில் திமுகவும் துடைத்தெறியப்படும்.

இவ்வாறு உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசினார். அவரின் பேச்சைக் கேட்ட அங்கே கூடியிருந்த ஆயிரக்கணக்கானோர் கரவொலி எழுப்பி உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணியை மேலும் வலுப்படுத்தும் நடவடிக்கைகள் தொடங்கி உள்ளன. வெகு விரைவில் அமித் ஷா தமிழகம் வர உள்ள சூழலில், முதல்வர் ஸ்டாலின் பெயரை மேடையில் குறிப்பிட்டு, அரசியல் ரீதியாக அமித் ஷா பேசி இருப்பது, குறிப்பிடத்தக்க ஒன்றாக பார்க்கப்படுகிறது.

# சிவகங்கை மாவட்டத்தில் வடமாடு மஞ்சுவிரட்டு நடத்த மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு

## சிவகங்கையில் வடமாடு மஞ்சுவிரட்டு நடத்த நிரந்தர மைதானம் அமைக்க கோரிக்கை





சிவகங்கை, டிச.10-

தமிழர்களின் பாரம்பரியமான வீர விளையாட்டான வடமாடு மஞ்சுவிரட்டு போடியை நடத்துவதற்கு நிரந்தர மைதானம் மற்றும் கலை அரங்கம் அமைத்து தர வேண்டும் என மாவட்ட ஆட்சியரிடம் நிர்வாகத்திடம் தமிழரின் பாரம்பரிய வீரவிளையாட்டு வடமாடு மஞ்சுவிரட்டு மைதானக் குழு சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

சிவகங்கை மாவட்டத்தில் வடமாடு மஞ்சுவிரட்டு போட்டிகள் அதிக அளவில் நடைபெற்று வருகிறது. சிவகங்கை நகரைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களில் வடமாடு மஞ்சுவிரட்டுக்காக பிரத்யேகமாக காளைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. நகர்ப்பகுதியைச் சுற்றி மட்டும் 1,000க்கும் மேற்பட்ட காளைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாதந்தோறும் அரசியல் கட்சித்தலைவர்கள் பிறந்தநாள் விழா, கோயில் திருவிழாக்கள் என ஏதோ ஒரு விழாவை முன்னிறுத்தி வடமாடு மஞ்சுவிரட்டு நடத்தப்படுகிறது. இதற்காக வெளி மாவட்டங்களில் இருந்தும் 3,000க்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் வருகின்றனர்.

ஆனால், நிகழ்ச்சியை பார்வையிட வரும் பார்வையாளர்களுக்குப் போதிய அமர்விடம், கழிப்பிட வசதி மற்றும் வாகன நிறுத்த வசதி இல்லாததால் கடும் சிரமம் நீடித்து வருகிறது. மேலும் மாடுபிடி வீரர்கள் ஓய்வு எடுப்பதற்கான உரிய வசதிகளும் இல்லாத காரணத்தால் தற்போது வடமாடு மஞ்சுவிரட்டு போட்டிகள் தனியார் இடங்களில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், வடமாடு மஞ்சுவிரட்டுக்கென நிரந்தரமாக தனி மைதானம் மற்றும் கலை அரங்கம் அமைக்க வேண்டும் என வலியுறுத்தி, தமிழரின் பாரம்பரிய வீரவிளையாட்டு வடமாடு மஞ்சுவிரட்டு மைதானக் குழு சார்பில் மாவட்ட ஆட்சியரிடம் திங்கள்கிழமை மனு அளிக்கப்பட்டது.

# இலவச தையல் இயந்திரம் பெறுவதற்கு வருகின்ற 15.12.2025 ஆம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரில் விண்ணப்பித்து பயன்பெறலாம்

## மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி தகவல்



சிவகங்கை, டிச.10-

சிவகங்கை மாவட்டத்தில் தகுதியுடைய முன்னாள் படைவீரர் மனைவி / கைம்பெண் மற்றும் திருமணமாகாத மகள்கள் ஆகியோர் இலவச தையல் இயந்திரம் பெறுவதற்கு வருகின்ற 15.12.2025 ஆம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரில் விண்ணப்பித்து பயன்பெறலாம் மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தகவல்.

தமிழ்நாடு சட்டப்பேரவையின் 2024-2025 ஆம் ஆண்டிற்கான பொதுத் துறை மானியக் கோரிக்கையின் (கோரிக்கை எண்:38) போது , சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களால், "முன்னாள் படைவீரர் மனைவி / கைம்பெண் மற்றும் திருமணமாகாத மகள்கள் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் தையல் பயிற்சி பெற்றிருப்பின், அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் இலவச தையல் இயந்திரம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பிப்பதற்கு, விண்ணப்பதாரர்கள் முன்னாள் படைவீரரின் மனைவி / கைம்பெண் மற்றும் திருமணமாகாத மகள்களாக இருத்தல் வேண்டும். மேலும், 40 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். முன்னாள் படைவீரர் பிறப்பால் தமிழ்நாட்டைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும். படைவிலகல் சான்றில் வீட்டு முகவரி தமிழ்நாடு மாநிலம் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். படைவிலகல் சான்றில் தையல் இயந்திரம் கோரும் பயனாளியின் பெயர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். மத்திய / மாநில அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் குறைந்தபட்சம் மூன்று மாதாகாலம் தையல் பயிற்சி முடித்து உரிய சான்று பெற்றிருத்தல் வேண்டும்.

முன்னரே மத்திய / மாநில அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களின் வாயிலாக இலவச தையல் இயந்திரம் பெற்றவராக இருத்தல் கூடாது போன்ற தகுதிகளை பெற்றிருத்தல் வேண்டும். மேலும், முன்னாள் படைவீரரின் குடும்பத்தில் தகுதியுள்ள ஒருவருக்கு மட்டுமே இலவச தையல் இயந்திரம் வழங்கப்படும்.

எனவே, தகுதியுள்ள முன்னாள் படைவீரர் மனைவி / கைம்பெண் மற்றும் திருமணமாகாத மகள்கள் ஆகியோர் இலவச தையல் இயந்திரம் பெறுவதற்கு வருகின்ற 15.12.2025 ஆம் தேதிக்குள் உரிய ஆவணங்களுடன் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தில் நேரில் விண்ணப்பித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சியர் கா.பொற்கொடி, தெரிவித்துள்ளார்.



# வேலூர் சிஎம்சி மருத்துவமனை நிறுவனர் டாக்டர் ஐடாஸ் கடர் அம்மையாரின் 155 வது பிறந்தநாள் முன்னிட்டு அவரது சிலைக்கு பாஜக பட்டியில் அணி சார்பாக மாலை அணிவித்து மரியாதை

வேலூர், டிச.10-

வேலூர் மாவட்டம் அண்ணா சாலையில் அமைந்துள்ள ஐ டாஸ் கடர் அம்மையாரின் 155 வது பிறந்தநாளையொடி முழு உருவ சிலைக்கு பாஜக சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

பாஜக பட்டியல் அணி தலைவர் டாக்டர் ஏ கே சரவணகுமார் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட பொதுச் செயலாளர் வி . அ . பீ ம் ரா ஜ் , மாவட்டத் துணைத் தலைவர் பாண்டியன், மாவட்ட செயலாளர் பழனி ஆண்டவர், குலோத்துங்கன், பிரேம் குமார் வாணியம்பாடி, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.







# திண்டுக்கல்லில் குழந்தைகள் அறிவியல் மாநில மாநாடு: சிவகங்கை மாவட்ட அரசு பள்ளி மாணவர்கள் சாதனை





சிவகங்கை, டிச.10-

சிவகங்கை மாவட்டம் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பாக திண்டுக்கல் மாவட்டத்தில் குழந்தைகள் அறிவியல் மாநில மாநாடு பி எஸ் என் ஏ உயர் தொழில்நுட்ப கல்லூரி கூட்டரங்கில் நடைபெற்றது. திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் சரவணன் மாநாட்டை தொடங்கி வைத்து சிறப்புரை யாற்றினார். நான்கு மண்டலங்களில் இருந்து தேர்ந்தெடுக் கப்பட்ட இளநிலை தமிழ் முதுநிலை தமிழ் இளநிலை ஆங்கிலம் முதுநிலை ஆங்கில பிரிவுகளில் 200 மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை மாணவ மாணவிகள் சமர்ப்பித்தனர். தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடைபெற்ற தெற்கு மண்டல அளவிலான குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் ஒன்றியத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மேலை யான்பட்டி மாணவர்கள் ஸ்ரீதர் வீர கணபதி இளநிலை தமிழ் பிரிவிலும் காரைக்குடி மகரிஷி வித்யா மந்திர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் ஜெயபாலன் பாண்டிசெல்வம் இளநிலை ஆங்கில பிரிவிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு மாநில அளவிலான குழந்தைகள் அறிவியல் மாநில மாநாட்டில் கலந்து கொண்டு தங்கள் ஆய்வு அறிக்கைகளை சமர்ப்பித்தனர்.

அதில் சிங்கம்புணரி ஒன்றியத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மேலயான்பட்டி மாணவர்கள் சமர்ப்பித்த ஆய்வு கட்டுரை மாநில அளவில் சிறந்த ஆய்வு கட்டுரையாக தேர்ந்தெடுக் கப்பட்டு சான்றி தழ்களும் கேடயங் களும் வழங்கப் பட்டது. வழிகாட்டி ஆசிரியை சக்திவள்ளி மற்றும் தலைமை ஆசிரியர் பாராட்ட ப்பெற்றனர். இரண்டு நாட்கள் நடைபெற்ற மாநாட்டில் இஸ்ரோ விஞ்ஞானி சசிகுமார் விஞ்ஞானி வெங்கடேஸ்வரன் எழுத்தாளர் ஆயிஷா நடராஜன் விஞ்ஞானி தினகரன் ஆகியோருடன் மாணவ மாணவிகள் கலந்துரையாடினர். தமிழ்நாடு அறிவியல் இயக்க சிவகங்கை மாவட்டச் செயலாளர் ஆரோக்கியசாமி மாவட்டத் தலைவர் முனைவர் கோபிநாத் மாவட்ட பொருளாளர் பிரபு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சேவற்கொடியோன் மாவட்டக் கல்வி ஒருங்கிணைப்பாளர் முனைவர் இளையராஜா வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டனர்.



# வேலூரில், மாவட்ட கலெக்டர் மற்றும் எஸ் பி ஆகியோர் வாக்கு என்னும் மையம் ஆய்வு

வேலூர், டிச.10-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, தொரப்பாடி அடுத்த இடையன்சாத்து, வேலூர் தந்தை பெரியார் பொறியியல் கல்லூரியில் 2026 சட்டமன்றத் தேர்தல் வாக்கு எண்ணும் மையம் அமைவது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலரும்/மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகனன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.





■ வேலூர் மாவட்டம் வேலூர் நகரம் CMC அவுட் கேட்டுக்கு எதிரே தோட்டப்பாளையம் காட்பாடி ரோடு தர்மராஜா கோவில் தெருவில் உள்ள தனியார் விடுதியில் சட்ட விரோதமாக வீட்டிற்கு பயன்படுத்தும் எல்பிஜி சிலிண்டர்களைக் கொண்டு சட்ட விரோதமாக சிலிண்டர் பரிமாற்றம் செய்யப்படுவதாக வந்த தகவலை அறிந்து திடீர் ஆய்வு மேற்கொண்டதில் 4 வீட்டு உபயோக சிலிண்டர்கள் சட்ட விரோதமாக பயன்படுத்தப்பட்டதை கண்டுபிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது . பாதுகாப்பு கருதி 2 இந்தியன் சிலிண்டர்கள் வெங்கடேஸ்வரா கேஸ் ஏஜென்சி இடமும் 2 பாரத் சிலிண்டர்கள் லட்சுமி கேஸ் ஏஜென்சி அரியூர் அவர்களிடமும் ஒப்படைப்பு செய்யப்பட்டு தகுந்த ரசீது பெறப்பட்டு மாவட்ட வழங்கல் அலுவலர்களிடம் வழங்க நடவடிக்கை



# வேலூரில் பாஜக சார்பில் அம்பேத்கரின் 69 வது நினைவு நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை

வேலூர், டிச.10-

டாக்டர் அம்பேத்கரின் 69 வது நினைவு நாளை முன்னிட்டு வேலூர் மக்கான் சந்திப்பில் உள்ள அம்பேத்கரின் உருவ சிலைக்கு பாஜக ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்

பாஜக சார்பில் மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி தலைமையில் நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளர் மாவட்டத் தலைவர் தசரதன், மற்றும் மாவட்ட சிறுபான்மை தலைவர் காட்பாடி கே.ஜி குட்டி , வேலூர் மாவட்ட துணைத் தலைவர் சக்கரவர்த்தி, மாவட்ட பட்டியில் அணி தலைவர் ஏ.கே டிவி நிறுவனர் சரவணகுமார்,மாவட்ட பொதுச் செயலாளர் சரவணகுமார், மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட பாஜகவினர் அம்பேத்கரின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



# வேலூரில், மாவட்ட ஆட்சியர் தலைமையில் 2026 தேர்தல் குறித்து அனைத்து கட்சி பிரமுகர்களுடன் ஆலோசனைக் கூட்டம்

வேலூர், டிச10-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 தொடர்பாக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுடனான ஆலோசனைக் கூட்டம், வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலரும் / மாவட்ட ஆட்சியருமான சுப்புலெட்சுமி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மா.சிவசுப்பிரமணியன், வாக்காளர் பதிவு அலுவலர்கள் வேலூர் சட்டமன்ற தொகுதி/ மாநகராட்சி ஆணையாளர் லட்சுமணன், அணைக்கட்டு சட்டமன்ற தொகுதி / வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில் குமார். குடியாத்தம் சட்டமன்ற தொகுதி/ குடியாத்தம் வருவாய் கோட்டாட்சியர் செல்வி சுபலட்சுமி, காட்பாடி சட்டமன்ற தொகுதி/ தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திருமாறன், கீ.வ.குப்பம் சட்டமன்ற தொகுதி/மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.





■ புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி ஒன்றியம் மழையூர் ஊராட்சி கடந்த சில நாட்களாக பெய்த மழையில் வெள்ளாள விடுதி சாலை உடைப்பு ஏற்பட்டதை மாலை தந்தி செய்தி எதிரொலியால் வெள்ளாள விடுதி சாலையை விரைந்து சாலை உடைப்பை சரி செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது கறம்பக்குடி மண்டல வட்டார வளர்ச்சி அலுவலர்துணை திருமதி நவமணி அவர்கள் மழையூர் ஊராட்சி செயலாளர் செந்தில்குமார் அவர்கள்பொதுமக்கள் வாழ்த்தி உள்ளனர்

மாலை தந்தி

புதன்கிழமை 10.12.2025



# அமிர்தா கேட்டரிங் டெக்னாலஜி மாணவர்களின் அரேபியன் நைட்ஸ் தீம் பார்க் நிகழ்ச்சி

கோவை, டிச.10-

கோவை மாவட்டம் தடாகம் சாலை பகுதியில் இயங்கி வரும் அமிர்தா இன்டர்நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் ஹோட்டல் மேனேஜ்மெண்ட் - கேட்டரிங் டெக்னாலஜி பயிற்சி நிறுவனத்தில் இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள் ஏற்பாட்டில் அரேபியன் நைட்ஸ் தீம் பார்க் என்ற நிகழ்ச்சி தலைமை நிர்வாக அதிகாரிகள் சுரேஸ் குமார், புவனேஸ்வரி, மற்றும் செஃப் கார்த்திகேசவன் ஆகியோர் தலைமையில் மிக சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் மாணவர்கள் அனைவரும் அரேபியன் உணவுகளான கேரட் இஞ்சி சூப், அரேபிய சீஸ் பச்சடி, அன்னாசி கபாப், ஹரியாலி கபாப், முர்க் கபாப், மைக் பசண்டா, ரோமாலி, உட்பட 14 வகையான உணவு களை சமைத்து விழாவை கொண்டாடினர். இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக மெர்லீஸ் ஹெச் ஆர் மேனேஜர் யசோதா, தொழில்முனைவோர் மகிஷாராஜன், மெர்லீஸ் ட்ரைனிங் மேனேஜர் சயந்தன் குண்டு, ஜோன் பை த பார்க் அசிஸ்டன்ட் மேனேஜர் பிரியா, ஜோன் பை த பார்க் டிசிடிபி விக்னேஷ், சரிகமப எஸ்5 டைட்டில் வின்னர் சுசாந்திகா, ஜோன் பை த பார்க் எக்ஸிக்யூட்டிவ் செஃப் சுப்பிரமணி, மற்றும் அமிர்தாவின் முன்னாள் மாணவர்கள் மொத்த விற்பனை வணிகர் தொழில்முனைவோர் பார்கவி அரசன், டைனிங் ஹோஸ்ட் பிரின்சஸ் குரூஸ் அமெரிக்கா எஸ் சரத் ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றுகள் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தனர் இந்நிகழ்ச்சியில் மாணவர்கள், பெற்றோர்கள் உட்பட 700 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். நிகழ்ச்சியை தொடர்ந்து இதில் மாணவர்களின் நடனம், பாட்டு போட்டிகள் போன்ற கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது





# குடியாத்தம், பேர்ணாம்பட்டு சாலை நெல்லூர்பேட்டை அருகே சாலை ஓரம் வசிக்கும் பட்டியலின மக்களை காலி செய்ய நீர்வளத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் நெருக்கடி

வேலூர், டிச.10-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக, காயிதே மில்லத் கூட்டரங்கில், திங்கட்கிழமை மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, பேர்ணாம்பட்டு சாலை, நெல்லூர்பேட்டை அருகே சாலை ஓரம் வசிக்கும் பட்டியலின மக்களை காலி செய்ய நீர்வளத்துறை மற்றும் சம்பந்தப்பட்ட துறை நிர்வாகம் மிகுந்த நெருக்கடி கொடுத்து அழுத்தம் தந்து வருவதாக குற்றச்சாட்டு. குடியாத்தம் தாலுகா, நெல்லூர் பேட்டை சுற்று வட்டார பகுதிகளில் செல்வாக்குடன் உள்ளவர்களுக்கு பட்டா வழங்கியுள்ளதாகவும், இது நாள் வரை எங்களுக்கு பட்டா வழங்காமல் காலி செய்ய அழுத்தம் கொடுத்து பட்டியலின மக்களை வஞ்சித்து துன்புறுத்துவதாகவும் அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் கூறுவதாவது: ஏழை எளிய மக்கள் இங்கு கூலி வேலை செய்து வசித்து வருவதாகவும், ஏற்கனவே நாங்கள் எங்கள் பெயரில் அரசால் வழங்கும் இலவச பட்டாவோ அல்லது இதே இடத்தில் வசிக்கும் இடத்திற்கு பட்டாவோ இது நாள் வரை அரசும் வழங்கவில்லை நாங்களும் பெறவில்லை நாங்கள் தொடர்ச்சியாக பட்டா வழங்க கோரிக்கை வைத்து வருகின்றோம். இதேபோல் அரசால் எடுக்கப்படும் நடவடிக்கை மற்றும் விதிமுறைக்கு கட்டுப்பட்டு வாழும் ஏழை மக்களாகிய நாங்கள் எங்களை வஞ்சித்து வருகிறார்கள், செல்வாக்கு மிகுந்தவர்களிடம் இதை காண்பிக்க மாட்டார்கள், குடியாத்தத்தில் பல இடங்களில் டிசி லேண்ட் பதிவு மற்றும் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு போன்ற அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றி விட்டால் நாங்களே இங்கிருந்து காலி செய்து சென்று விடுகிறோம். பெரும்புள்ளி செல்வாக்கு மிகுந்த சிலர் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு போன்ற பல்வேறு ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் ஏழை எளிய மற்றும் கூலி வேலை செய்து தினமும் குடும்பத்தை காப்பாற்றி வரும் பட்டியலின மக்களை காலி செய்ய கெடிபுடி நெருக்கடி செய்வது குறித்து நாங்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம் என தெரிவிக்கின்றனர். சுமார் 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பள்ளிக் குழந்தைகளுடன் தத்தளித்து வருகின்றோம் எங்களுக்கு பட்டா வழங்கவும் அல்லது வேறு இடத்தில் பட்டா வழங்கி வீடு கட்டுவதற்கான வழிகாட்டுதல்களையும் வழங்கிய பின் நாங்களே இந்த இடத்தில் இருந்து காலி செய்து விடுகின்றோம் என இவ்வாறு மனக்குமுறலுடன் குடும்பத்துடன் குழந்தை குட்டி மகன்கள் மகள்கள் பள்ளி சீருடைகளுடன் ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து ஆட்சியரிடம் மனு அளித்து இவர்களின் கோரிக்கைகளை தெரிவித்தனர். குறிப்பு: 40 குடும்பங்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதால் இங்கிருந்து காலி செய்யும் இந்த தருணத்தில் படிப்பு தடைபடும் சிரமம் ஏற்படும் சூழ்நிலையில் தத்தளித்து வருவதாகவும் கூறுகின்றனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் ஏழை எளிய மற்றும் பட்டியலின மக்களாகிய எங்களுக்கு கருணை அடிப்படையில் அவ காசம் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள சலுகைகளை வழங்கி உதவுமாறு மாவட்ட ஆட்சியருக்கும், தமிழக அரசுக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# பழனியில் அன்னை சோனியா காந்தியின் பிறந்தநாள் விழா

திண்டுக்கல், டிச.10-

திண்டுக்கல் மாவட்டம் பழனி வ.உ.சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள காந்தி சிலை முன்பு இந்திய தேசிய காங்கிரஸ் பேரியக்கத்தின் முன்னாள் தலைவர் சோனியா காந்தியின் பிறந்த நாளை முன்னிட்டு காங்கிரஸ் பேரியக்க நிர்வாகிகள் அன்னை சோனியா காந்தியின் திருவுருவப்படம் வைத்து பிறந்தநாள் விழா நிகழ்ச்சி நடைபெற்றன.

இந்நிகழ்வின் தலைமையாக நகர தலைவர் முத்து விஜயன் மண்டல தலைவர் வீரமணி வரவேற்புரையாக மாநில பொறுப்பாளர் சாய்ரா பானு பேராசிரியர் கனகராஜ் மாவட்டத் துணை தலைவர் முருகானந்தம் மற்றும் சுந்தர், ராமகிருஷ்ணன், தேவேந்திரன், நேரு, முகமது அலி, பாப்புச்சாமி, பீட்டர், கணபதி, பிரேம்குமார், குப்புசாமி, சரவணன், மணிகண்டன், பாலு, தண்டபாணி, சாகுல் ஹமீது, சுப்பிரமணி, செல்வம், முத்துக்கிருஷ்ணன், முத்துபாண்டி, லோகநாதன், உள்ளிட்ட நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு சோனியா காந்தியின் பிறந்தநாள் முன்னிட்டு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்தனர் மேலும் இந்தி தேசிய காங்கிரஸின் புகழ் பாடும் விதமாக கட்சி நிர்வாகிகள் பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு பிறந்தநாள் விழா நிகழ்ச்சி வெகு விமர்சியாக கொண்டாடி மகிழ்ந்தனர்..

# பல்லாவரத்தில் ஜெயலலிதாவின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் அறுசுவை உணவு வழங்கினார்

பல்லாவரம், டிச.10-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் புரட்சித் தலைவி ஜெயலலிதாவின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு செங்கல்பட்டு மேற்கு மாவட்ட பல்லாவரம் பகுதி கழகச் செயலாளர் தா.ஜெயபிரகாஷ் ஏற்பாட்டில் பல்லாவரம் பேருந்து நிலையம் அருகே அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அம்மா திருவுரு படத்திற்கு மாவட்ட கழக செயலாளர் சிட்லபாக்கம் ச.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் பா.தன்சிங் தலைமையில் பலர் தூவி அஞ்சலி செலுத்தினார்கள் பின்னர் அதனை தொடர்ந்து பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது இந்நிகழ்ச் சியில் கழக மாணவரணி துணைத் தலைவர் டாக்டர் டி.மோசஸ் ஜோஸ்வா, காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் கஜா என்கின்ற கஜேந்திரன், கீழ்கட்டளை பகுதி கழகச் செயலாளர் சந்திரசேகர் ராஜா, மற்றும் பகுதி கழக



நிர்வாகிகள் எம்.குமார், ஆர்.ரவிச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி கவுதம், எஸ்.சந்தானம், ஆர்.செல்வம், சரத் லோகநாதன், டி.ஆர்.ராஜேஷ், அன்பு, பிரகாஷ், குமார், ராஜேஷ் கண்ணா, ராஜ் பரத், டபுள்யூ, அக்ராம்கான், மகாலிங்கம், ராஜ்குமார், ஆறுமுகம், ஹசிபுல்லா, சம்சுதீன், மகேஷ், செந்தில், ரமேஷ், அருமைநாதன், மாறன், பாஸ்கர், சத்யராஜ், பலராமன், வீரமுத்து, சஞ்சீவி, ரகுபதி, பிரசாந்த், சத்தியா, அப்துல்கரீம், சிவகுரு, பரத், நாகராஜ், முத்துராஜ், மாரி, நரேஷ் குமார், சித்ரா, கலைமதி, பிரவீனா, ரேவதி, கவிதா, குப்பம்மா, கீதா, பார்வதி, சந்தியா, வினோத்குமார் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## கிழக்கு தாம்பரம் கிறிஸ்து ராஜா பள்ளியில் 413 மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா வழங்கினார்

தாம்பரம், டிச.10-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி ஐந்தாவது மண்டலத்திற்கு உட்பட்ட கிழக்கு தாம்பரம் தமிழ்நாடு அரசு உதவி பெறும் கிறிஸ்து ராஜா பெண்கள் மேல்நிலைப் பள்ளி யில் தமிழ்நாடு அரசு விலையில்லா மிதி வண்டி வழங்கும் விழா பள்ளி தலைமை ஆசிரியர் ரெனிட்டா தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பு உரை யாற்றினார். அதன் தொடர்ந்து பள்ளியில் பயலும் 413 மாணவிகளுக்கு விலையில்லா மிதி வண்டிகளை வழங்கினார் இந்த நிகழ்ச்சியில் தாம்பரம் மாநகராட்சி ஐந்தாவது மண்டல குழு தலைவர் எஸ்.இந்திரன், மாமன்ற உறுப்பினர்கள் ஜோதிகுமார், ஷகிலா ஜான்சி மேரி, பகுதி துணை செயலாளரும், தலைமை கழக பேச்சாளர் கீ.வேலுமணி, மாநகர பிரிரிநிதி லோகேஷ், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் கார்த்திக், சிவசுப்பிரமணியன், நிர்வாகிகள் ரமேஷ்பாபு, திவாகர் மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ சேலம் மாவட்டத்தில் தேர்தலுக்காக பயன்படுத்த உள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களுக்கு முதல் நிலை சரிபார்த்தல் பணிகள் நடைபெறுவது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி., தலைமையில் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. உடன் சேலம் மாநகராட்சி ஆணையாளர் திரு.மா.இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.விவேக் யாதவ், மாவட்ட ஆய்வுகுழு அலுவலர் திரு. சுந்தரராமன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் உள்ளனர்.

# எட்டாம் ஆண்டு வருஷாபிஷேக விழா

சிவகங்கை, டிச.10-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ரயில்வே காலனி நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் .கார்த்திகை மாதம். 27ம் தேதி. (13. 12. 2025) சனிக்கிழமை அன்று ஹஸ்தம் நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் அன்று காலை 10.00 மணிக்கு மேல் 11.30 மணிக்குக் மானாமதுரை ஆதனூர் ரோட்டில் ( ரயில்வே காலணி) அமைந்துள்ள நலம் தரும் ஶ்ரீ சீரடி சாய்பாபா ஆலயத்தில் எட்டாம் ஆண்டு வருஷாபிஷேகத்தை முன்னிட்டு 108 சங்காபிஷேகமும்..... மற்றும் சிறப்பு ஹோமமும்.... அபிஷேகம்.... ஆராதனை நடைபெறும். 12.00 மணிக்கு மேல் நாராயண சேவை (என்ற ) அன்னதானம் நடைபெற இருப்பதால் அனைத்து சாய் பக்தர்களும் கலந்து கொண்டு சிறப்பித்து சாய்பாபா ....அருளை பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.... சாய்பாபாவிற்கு சங்கினால் தங்கள் கரங்களால் அபிஷேகம் செய்யலாம். ( அபிஷேக பொருட்கள் மற்றும் ஹோம சாமான்கள் வாங்கி கொடுக்கலாம். ). இப்படிக்கு சாய் பக்தர்கள் ... மற்றும் நிர்வாக குழுவினர்கள் மானாமதுரை. தங்கள் நல்வரவை விரும்பும். சிவ. ஶ்ரீ. KM. நாகமணி அய்யர். மானாமதுரை. 94866 94640.





# சிவகங்கை மாவட்ட திமுக சார்பில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி ஆலோசனை கூட்டம்

திருப்பத்தூர், டிச.10-

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் பங்குபெற்ற காணொளி காட்சி கூட்டம் நடைபெற்றது...

அவைத்தலைவர் அ. கணேசன் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் தமிழ்நாடு கூட்டுறவுத் துறை அமைச்சர், கேஆர். பெரியகருப்பன், முன்னாள் அமைச்சர் தென்னவன், சட்டமன்ற உறுப்பினர்

ஆ. தமிழரசி ரவிக்குமார், துணைச் செரலாளர்களான சேர்மன் சேங்கைமாறன், ஜோன்ஸ் ரூஸோ, மாவட்ட இளைஞரணி நாகனி பா. செந்தில்குமார் , தொகுதி பார்வையாளர்கள் கேஆர்என். போஸ், புதுக்கோட்டை சண்முகம் , ஆர். சுந்தரராஜன் , ஆர். எஸ். மங்களம் நல்லசேதுபதி, சட்டமன்ற மேனாள் உறுப்பினர்கள் சுப. மதியரசன், சேர்மன், மாரியப்பன் கென்னடி, தலைமைப் பொதுக்குழு பள்ளத்தூர் கே. எஸ். ரவி, கல்லல் நெடுஞ்செழியன் , சிவகங்கை சேர்மன் சி. எம்.துரை ஆனந்த் , தேவகோட்டை நகரம் பெரி. பாலமுருகன் அம்பலம் , தேவகோட்டை தெற்கு நாகனி ரவி , மேனாள் சேர்மன், காளையார்கோவில் கிழக்கு ஒன்றிய செயலாளர் வே. ஆரோக்கியசாமி, ம. ஜெயராமன் , திருமலை ஆ. முத்துராமலிங்கம் , கண்டாங்கபட்டி மந்தக்காளை , நகரம் பொன்னுச்சாமி , வே. தமிழ்மாறன் , சேர்மன் நஜ்முதீன் , துணைத்தலைவர் டி. கே. இபுறாஹீம் உள்ளிட்ட ஒன்றிய , நகர, பேரூர்க்கழக செயலாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்...



## மானாமதுரையில் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி 300க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைந்தனர்

மானாமதுரை, டிச.10-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பகுதியில், திமுக, அதிமுக, நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட முக்கிய அரசியல் கட்சிகளில் இருந்து விலகி, 300க்கும் மேற்பட்டோர் தமிழக வெற்றி கழகத்தில் இணைந்தனர். மானாமதுரை தனியார் திருமண மஹாலில் நடைபெற்ற இந்த சிறப்பு இணைப்பு விழாவில் தமிழக வெற்றி கழக சிவகங்கை மாவட்ட செயலாளர் முத்து பாரதி தலைமை தாங்கினார். மேலும் மானாமதுரை நகர செயலாளர் நம்பிராஜன் முன்னிலை வகித்தார். நடைபெற்றது. ரஞ்சித் தலைமையில் 300க்கும் மேற்பட்டோர் இணைப்பு விழாவில் இணைந்தனர். புதிய உறுப்பின ர்களுக்கு, கட்சியின் கொடிகள் மற்றும் அடையாள அட்டை வழங்கப்பட்டு, அவர்களை வரவேற்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மானாமதுரை நகர செயலாளர் நம்பிராஜன் பேசுகையில், மானாமதுரை பகுதியில் சாலை, குடிநீர், கழிவுநீர் வடிகால், உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் நீண்ட காலமாக நிலவி வருகின்றன. அவற்றில் பலவற்றை எடுத்துக் கொண்டு தமிழக வெற்றி கழகம் போராடி வருகிறது. இதனால்தான் பல கட்சி ஆதரவாளர்கள் நம்பிக்கையுடன் எங்கள் கட்சியைத் தேர்வு செய்கிறார்கள் என்று கூறினார்.






## சிவகங்கையில் தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

சிவகங்கை, டிச.10-

சிவகங்கை அரண்மனை வாசல் முன்பாக ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்துள்ள தொழிலாளர்களுக்கு விரோதமான முதலாளிக்கு ஆதரவான தொழிலாளர் சட்டத் தொகுப்புகளை உடனடியாக திரும்பப் பெற வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி மற்றும் இடதுசாரிகள் நடத்தும் மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி,இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (ML) கட்சியை சேர்ந்த நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

புதிய தொழிலாளர் விரோத சட்டங்களை விசிக எதிர்க்க முக்கிய காரணம் என்ன?

1. ஒரு நிறுவனத்தில் பணிபுரியும் மேனேஜர் ரூ 18,000 க்கு மேல் மாதச்சம்பளம் வாங்கினால் அவர் தொழிலாளர் இல்லை.

2.நிரந்த தொழிலாளர் இல்லாமல் ஒப்பந்த தொழிலாளர் முறையை கொண்டு வருவதால் எப்பொழுது வேண்டுமானாலும் வேலை பறிபோகும் நிலை.பணி நிரந்தரமே கிடையாது.

3. ஒரு நிறுவனத்தின் ஆட்குறைப்பு நடவடிக்கைக்கு அரசின் அனுமதி தேவையில்லை.

4. தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்வதற்கு கடும் கட்டுப்பாடு விதிப்பு, அரசமைப்பு வழங்கிய உரிமை பாதிப்பு.

5. தொழிற்சங்கங்கள் அமைப்பதற்கும், அங்கீகரிப்பதற்கும் கடுமையான நிபந்தனைகள் விதிப்பு.

6. தொழிலாளர் போராட்டத்தை அடுத்த சமூக/சமரச முத்தரப்பு/இருதரப்பு பேச்சுவார்த்தைக்கு கடும் கட்டுப்பாடு விதிப்பு

7. அடிப்படை சம்பளத்தில் 50 விழுக்காடு வருங்கால வைப்பு நிதிக்காக பிடித்தம் செய்யப்படும்.

8. ஊதிய தொகுப்பு, பணிக்கொடை, ஓய்வுதியம், ESI, பயணப்படி,மருத்துவ விடுப்பு உள்ளிட்டவை பாதிக்கப்படும்.

9. அமைப்புசாரா தொழிலாளர்களின் சேமிப்பு உரிமைகள் நலன்கள் பாதிப்பு.

10. புலம்பெயர் தொழிலாளர்களின் உரிமைகள் நலன்கள் பாதிப்பு

11. சிறு,குறு நிறுவனங்களில் பணியாற்றும் தொழிலாளர்களின் பணிப்பாதுகாப்பு,சுகாதார வசதி கேள்விகுறியாகும்.

12. அடிப்படை சம்பளத்தை தவிர இதர படிகள் அனைத்தும் தொழிலாளர் உரிமை இல்லை.

13. தொழிலாளர் ஊதியத்தை மாநில அரசுகள் தான் தீர்மானிக்கும். தேசிய அளவில் அடிப்படை சம்பளம் வரையறை இல்லை.

14. குறைந்தபட்ச ஊதிய குழுவின் பரிந்துரைகள் மாநில அரசை கட்டுப்படுத்தாது.

15. வாரம் ஒரு நாள் விடுமுறை பாதிக்கும்.

16. 8 மணி வேலை நேரம் பாதிக்கும். மாநில அரசு தீர்மானிக்கலாம். ஓய்வுரிமை பாதிக்கும்.

17. பாதுகாப்பு விவகாரத்தில் நாடாளுமன்ற முடிவுக்கு விடாமல் அதிகாரிகளின் முடிவுக்கு வழிவகுக்கும்.

19. எளிமையான சட்டம் என்று சொல்லி எளிமையாக சுரண்டல் நடக்கும்.

20. 50 கோடி தொழிலாளர்கள் பாதிக்கப்பட வாய்ப்பு. இந்த ஆர்ப்பாட்டத்தில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சிவகங்கை தெற்கு மாவட்ட செயலாளர்

வழ.வே.பாலையா, வடக்கு மாவட்ட செயலாளர் சிசு.இளையகௌதமன்

கண்டன உரையாற்றினார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் கருத்தியல் பரப்பு மாநில துணைச் செயலாளர் அ.செல்லப்பாண்டியன் சிறப்புரையாற்றினார்.சிவகங்கை மாவட்ட மண்டல செயலாளர் பெரியசாமி

சிவகங்கை, மானாமதுரை சட்டன்றதொகுதி மண்டல துணைச் செயலாளர் முத்துராசு, திருப்பத்தூர்,

காரைக்குடி சட்டமன்ற தொகுதி மண்டல துணைச்செயலாளர் சங்கு. உதயகுமார்

மாவட்ட பொருளாளர் பாஸ்கரன் மாவட்ட துணைச்செயலாளர்

சுடர்மணி ,மாவட்ட செய்தித்தொடர்பாளர் மூ.ஆதிவளவன், வழக்கறிஞரணி மாநில துணைச் செயலாளர் வழ.அய்யனார்

கட்சியின் மாநில, மாவட்ட ஒன்றிய நகர பொறுப்பாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



## வேலூரில், தேசிய அளவிலான விளையாட்டுக் கூட்டமைப்பில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட ஆட்சியர் பாராட்டி வாழ்த்து தெரிவிப்பு

வேலூர், டிச.10-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக காயிதே மில்லத் கூட்டரங்கில் (08.12.2025) நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில், வேலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவிகளுக்கு குறு வட்டம் முதல் மாநில அளவில் நடத்தப்பட்ட தேசிய அளவிலான விளையாட்டு கூட்டமைப்பு நடத்திய போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இந்நிகழ்வின் போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆர். பிரேமலதா, மாவட்ட விளையாட்டு அலுவலர் சுப்பிரமணி, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் சரஸ்வதி, மாணவ மாணவிகளின் பெற்றோர்கள், சமூக ஆர்வலர் நோபல் லிவிங்ஸ்டன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## திருப்பூர் நெடுஞ்சாலைத் துறை கோட்ட பொறியாளர். ரத்தினசாமி. சாலைகளை பராமரிக்கும்படி உத்தரவு

திருப்பூர், டிச.10-

திருப்பூர் வடக்கு உட்கோட்டத்திற்கு உட்பட்ட நெடுஞ்சாலை மாநில நெடுஞ்சாலைகளான. திருப்பூர் இருந்து சோமனூர் சாலையின் அளவு, கிலோமீட்டர்.4/6, போயர் காலனி மற்றும் கோழி பண்ணை பேருந்து நிறுத்தம். அருகில் உள்ள திருப்பூர் சாலைகளைப் பிரிக்கும் விதமாக அமைந்துள்ள சுற்றுச்சாலை. இதன் கிலோமீட்டர்.0/2 மற்றும் 32/6. பூண்டி கோயில் மற்றும் அனுப்பர்பாளையம் , மற்றும் ஆத்துப்பாளையம், வாகன போக்குவரத்து. தங்கு தடை இன்றி செல்வதற்காக தார் நொடிகள் போடப்பட்டு சாலை பராமரிப்பு பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டது. இதனால் போக்குவரத்திற்கும் பொதுமக்களும் எந்த இடையூறு இல்லாமல் வாகனங்கள் சென்றுவர ஏதுவாக இருக்கும் என திருப்பூர் நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் மற்றும் உதவி பொறியாளர் தெரிவித்தனர்.




■ திருப்பூரில் கொடி நாள் தினத்தை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடிநாள் தின நிகழ்ச்சி நடைபெற்றது. உடன் உதவி இயக்குநர் (முகூ.பொ) முன்னாள் படை வீரர் நலன் மு.புஷ்பலதா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



■ பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் 2025–26 ஆம் கல்வியாண்டில் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் அறிவியல் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.



## குடியாத்தம், பேர்ணாம்பட்டு சாலை நெல்லூர்பேட்டை அருகே சாலை ஓரம் வசிக்கும் பட்டியலின மக்களை காலி செய்ய நீர்வளத்துறை கெடுபிடி கரார்

வேலூர், டிச.10-

வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக, காயிதே மில்லத் கூட்டரங்கில், திங்கட்கிழமை மக்கள் குறை தீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி தலைமையில் நடைபெற்றது. வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, பேர்ணாம்பட்டு சாலை, நெல்லூர்பேட்டை அருகே சாலை ஓரம் வசிக்கும் பட்டியலின மக்களை காலி செய்ய நீர்வளத்துறை கராராக கெடுபிடி கொடுத்து அழுத்தம் தந்து வருவதாக குற்றச்சாட்டு. குடியாத்தம் தாலுகா, நெல்லூர் பேட்டை சுற்று வட்டார பகுதிகளில் செல்வாக்குடன் உள்ளவர்களுக்கு பட்டா வழங்கியுள்ளதாகவும், இது நாள் வரை எங்களுக்கு பட்டா வழங்காமல் காலி செய்ய அழுத்தம் கொடுத்து பட்டியலின மக்களை வஞ்சித்து துன்புறுத்துவதாகவும் அப்பகுதி மக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு கொடுத்துள்ளனர்.

இப்பகுதி மக்கள் கூறுவதாக: ஏழை எளிய மக்கள் இங்கு கூலி வேலை செய்து வசித்து வருவதாகவும், ஏற்கனவே நாங்கள் எங்கள் பெயரில் அரசால் வழங்கும் இலவச பட்டாவோ அல்லது இதே இடத்தில் வசிக்கும் இடத்திற்கு பட்டாவோ இது நாள் வரை அரசும் வழங்கவில்லை நாங்களும் பெறவில்லை நாங்கள் தொடர்ச்சியாக பட்டா வழங்க கோரிக்கை வைத்து வருகின்றோம். இதேபோல் அரசால் எடுக்கப்படும் நடவடிக்கை மற்றும் விதிமுறைக்கு கட்டுப்பட்டு வாழும் ஏழை மக்களாகிய நாங்கள் குடியாத்தத்தில் பல இடங்களில் டிசிலேண்ட் பதிவு மற்றும் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு போன்ற அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றி விட்டால் நாங்களே இங்கிருந்து காலி செய்து சென்று விடுகிறோம். பெரும்புள்ளி செல்வாக்கு மிகுந்த சிலர் நீர்நிலைகள் ஆக்கிரமிப்பு போன்ற பல்வேறு ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் ஏழை எளிய மற்றும் பட்டியலின மக்களை காலி செய்ய கெடிபுடி செய்வது குறித்து நாங்கள் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம் என தெரிவித்தனர். சுமார் 40க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பள்ளிக் குழந்தைகளுடன் தத்தளித்து வருகின்றோம் எங்களுக்கு பட்டா வழங்கவும் அல்லது வேறு இடத்தில் பட்டா வழங்கி வீடு கட்டுவதற்கான வழிகாட்டுதல்களையும் வழங்கிய பின் நாங்களே இந்த இடத்தில் இருந்து காலி செய்து விடுகின்றோம் என இவ்வாறு மனக்குமுறலுடன் தெரிவித்துள்ளனர். குறிப்பு: 40 குடும்பங்களின் குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதால் இங்கிருந்து காலி செய்யும் இந்த தருணத்தில் படிப்பு தடைபடுமா சிரமம் ஏற்படும் சூழ்நிலையில் தத்தளித்து வருவதாகவும் கூறுகின்றனர். மாவட்ட ஆட்சியர் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் ஏழை எளிய மற்றும் பட்டியல் என மக்களாகிய எங்களுக்கு கருணை அடிப்படையில் அவகாசம் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள சலுகைகளை வழங்கி உதவுமாறு கேட்கின்றனர்.




## குடியாத்தம் தாழையாத்தம் இலவச தாழை சிலம்பம் பயிற்சி சார்பில் கர்நாடகா பெங்களூருவில் தேசிய அளவிலான சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்று சாதனை

### இளைஞர் விளையாட்டு அகில இந்திய தேசிய சாம்பியன்ஷிப் தகுதிச் சான்றிதழ் 2025 சான்றிதழ்கள் வழங்கி பாராட்டு

வேலூர் டிச10-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் தாழையாத்தம் இலவச தாழை சிலம்பம் பயிற்சி பள்ளி சார்பில் கர்நாடகா மாநிலம், பெங்களூரில் தேசிய அளவிலான சிலம்பம் போட்டி சிலம்ப பயிற்சி ஆசிரியர் சிவகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் தாழையாத்தம் இலவச தாழை சிலம்பம் பயிற்சி பள்ளி மாணவ மாணவிகள் 25 பேர் இப்போட்டியில் வந்து கொண்டனர். நீ போட்டியில் 23 மாணவர்கள் முதல் பரிசும், இரண்டு மாணவர்கள் இரண்டாம் பரிசு வென்று சாதனை படைத்து, ஃபார்ம் 2 மத்திய அரசின் பதிவு பெற்ற இளைஞர் விளையாட்டு அகில இந்திய தேசிய சாம்பியன்ஷிப் தகுதிச் சான்றிதழ் 2025 சான்றிதழ்கள், மெடல் மற்றும் வெற்றி குழுவிற்கு பிராஃபி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. இது குறித்து சாதனை படைத்த மாணவர்களின் பெற்றோர்கள், பள்ளி ஆசிரியர்கள், மக்கள் சமூக ஆர்வலர்கள் இவர்களை பாராட்டி வருகின்றனர்.



## காட்பாடி அடுத்த கழிஞ்சூர் அரசு பள்ளி அறிவியல் புத்தாக்க கண்டுபிடிப்பு மாணவி செல்வி மாலினியை மாவட்ட ஆட்சியர் பாராட்டி கௌரவிப்பு

வேலூர், டிச.10-

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியரக, காயிதே மில்லத் கூட்டரங்கு, மக்கள் குறை தீர்வு நாள் கூட்டத்தில், அறிவியல் புத்தாக்க கண்டுபிடிப்பிற்காக மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று தேசிய அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்க தேர்வு செய்யப்பட்டுள்ள கழிஞ்சூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 8ம் வகுப்பு பயிலும் மாணவி செல்வி மாலினிக்கு மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி வாழ்த்து தெரிவித்து பாராட்டு சான்று வழங்கினார். இந்நிகழ்வின் போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஆர்.பிரேமலதா, மாவட்ட விளையாட்டு அலுவலர் சுப்பிரமணி, மாணவியின் பெற்றோர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் உடனிருந்தனர்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161